# TAMIL LANGUAGE
# PRIMARY TWO
## (2025)

**நோக்கு** : ஆர்வமுட்டும் முறையில் தமிழ்மொழியைக் கற்பித்தல்

**செயல்** : மாணவர்களுக்குப் பலதரப்பட்ட கற்பித்தல் முறைமைகளைக் கொண்டு தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்கத் தூண்டுதல்

**அறிமுகம்**

உங்கள் பிள்ளை தமிழ்மொழியை ஆர்வத்தோடு விரும்பிக் கற்றுப் பிறரோடு தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் பேசத் தேவையான மொழியாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், அவர் தமிழில் தயக்கமின்றித் தம் கருத்துகளைப் பிறருடன் பரிமாறிக்கொள்ளும் திறனையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் உங்கள் பிள்ளைகளால் பொருத்தமான கற்றல் சூழலில் அதிக ஈடுபாட்டுடன் கற்று மொழியைத் திறன்பட பயன்படுத்தவும் இருவழித்தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

**தமிழ் எழுத்துகளின் அறிமுகம்**

முதல் ஆண்டு இறுதிக்குள் மாணவர்களுக்கு 18 மெய் எழுத்துக்களும் அ,ஆ,இ,ஈ,உ,ஊ ஆகிய 12 உயிரெழுத்துகளும் அவற்றைக்கொண்டு உருவாகும் உயிர்மெய் எழுத்துகளும் கற்பிக்கப்படும். இரண்டாம் ஆண்டு இறுதிக்குள் மாணவர்களுக்குக் கற்ற எழுத்துக்களைக்கொண்டு சொற்றொடர்கள் உருவாக்கவும் அச்சொற்களைக்கொண்டு கட்டுரை எழுதவும் கற்பிக்கப்படும்.

| தொடக்கநிலை 2 |
|---|
| ‘ஊ’ உயிரெழுத்து |
| ஊகர உயிர்மெய் எழுத்துகள் |
| ‘எ’ உயிரெழுத்து |
| எகர உயிர்மெய் எழுத்துகள் |
| ‘ஏ’ உயிரெழுத்து |
| ஏகார உயிர்மெய் எழுத்துகள் |
| ‘ஐ’ உயிரெழுத்து |
| ஐகார உயிர்மெய் எழுத்துகள் |
| ‘ஒ’ உயிரெழுத்து |
| ஒகர உயிர்மெய் எழுத்துகள் |
| ‘ஓ’ உயிரெழுத்து |
| ஓகார உயிர்மெய் எழுத்துகள் |
| ‘ஔ’ உயிரெழுத்து |
| ஔகார உயிர்மெய் எழுத்துகள் |
| ஆய்த எழுத்து |
| |
| |

## <u>பாடத்திட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம்</u>

1. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்

1) மொழித்திறன்கள்
2) கருத்துப்பரிமாற்றத்திறன்கள்
3) விழுமியங்கள் (values)
    - ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள்
    - மதிப்பீடு
    - தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம் ( flexible syllabus )

2. பண்பாட்டுக் கூறுகளை மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு நாட்டு உருவாக்கத்திற்குத் தேவையான பண்பு நலன்களையும் பெறச் செய்தல்

## சூச்சின் தொடக்கப்பள்ளியின் பாடத்திட்டம்

- தேன்தமிழ் பாடநூல்

  2A - மொத்தம் 13 பாடங்கள் உள்ளன

  2B - மொத்தம் 13 பாடங்கள் உள்ளன

- இன்பத்தமிழ் பயிற்சிநூல்

  2A - மொத்தம் 13 பாடங்கள் உள்ளன

  2B - மொத்தம் 13 பாடங்கள் உள்ளன

- 2A / 2B இன்பத்தமிழ் கையெழுத்து பயிற்சிநூல்
- 2A / 2B – சொற்பட்டியல் ( தொகுப்பு )
- பட அட்டைகள்
- மின்னட்டைகள்
- பெரிய புத்தகங்கள்
- சிறுவர் கதைநூல்கள்
- மொழி - பயிற்சித்தாள்கள்
- சொல்வதெழுதுதல் – (சொல்வளப்பட்டியல்)
- முறைசாரா மதிப்பீட்டுத்தாள்கள்
- இன்பத்தமிழ் இனணயத்தளம்
- SLS இணையத்தளம்
- மொழி விளையாட்டுப் பலகைகளும் அட்டைகளும்

| பள்ளி கொண்ட நடவடிக்கைகள் |
|---|
| • மௌன வாசிப்பு - Uninterrupted Sustained Silent Reading (USSR)<br>• சூச்சினில் வாசிப்பை நேசிப்போம் - வாரம்தோறும் வாசிக்கும் நேரம்<br>• இலக்குகளை நோக்கிய வாசிப்பு – விலங்கு கதைகள்<br>• மின்னியல் புத்தகம் வாசித்தல்<br>• கதை நேரம் (கைப்பாவை / முகமூடிக்கொண்டு கூறும் கதைகள்)<br>• தமிழ்மொழி இருவார நடவடிக்கைகளில் மொழியின் மீதும் பண்பாட்டின் மீதும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்<br>• மொழி விளையாட்டு<br>• பாரம்பரிய விளையாட்டுக்கள்<br>• பண்பாட்டை தழுவிய நடவடிக்கைகள் |
| **மதிப்பீடு** |
| • படைப்புத்திறன்<br>• முறைசாரா மதிப்பீடு<br>• வகுப்பறை உற்றுநோக்கல்<br>• தினசரி பாடங்கள் |

## மொழித்திறன்

**கேட்டல் / நோக்கல்**

- குறிப்பிட்ட தகவல்களைக் கேட்டறிந்தும் பார்த்தும் புரிந்துணர்வை வெளிப்பபடுத்துவர்.
- பொதுவான தகவல்களைக் கேட்டு அல்லது பார்த்துப் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.

**எடுத்துக்காட்டு** :-

சிறிய கதை அல்லது நிகழ்ச்சியைக் கவனமாகக் கேட்டும் பார்த்தும் கேட்கப்படும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்

**பகுதி 2**

## பனுவல் 1

மாலாவும் கலாவும் சகோதரிகள். இருவரும் ஒரே பள்ளியில் படிக்கிறார்கள். கலாவுக்கு நடனம் என்றால் விருப்பம். மாலாவுக்கு ஓவியம் என்றால் கொள்ளை ஆசை. மாலா நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஓவியம் வரைந்து வீடு முழுவதும் ஒட்டி வைத்திருந்தாள். அவர்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் அந்த ஓவியங்களைப் பார்த்துப் பாராட்டுவார்கள். பள்ளியில் நடந்த ஓவியப்போட்டியில் மாலா தன் அக்கா கலா பாடுவதுபோல் வரைந்திருந்தாள். மாலாவின் ஓவியத்திற்கு முதல் பரிசு கிடைத்தது. அவள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

**கேள்வி**

கலாவுக்கு எதில் விருப்பம்?

1) நடனம் ஆடுவதில்
2) ஓவியம் வரைவதில்
3) பாடல் பாடுவதில் ( )

**பேசுதல்**

- பொருத்தமான குரல் ஏற்ற இறக்கத்துடனும் சரியான உச்சரிப்புடனும் கேட்பவரின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் பேசுவர்.
- கருத்துகளைத் தெளிவாகவும் தொடர்புபடுத்தியும் சரளமாகப் பேசுவர்.

**எடுத்துக்காட்டு** :-

குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை விளக்கும் தனிப்படத்தைப் பார்த்து அவர்கள் புரிந்துகொண்டவற்றைப் பேசுதல்.

இந்தப்படம் ஒரு கடற்கரையைக் காட்டுகிறது. இங்கு மாணவர்களும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். கடற்கரை பார்ப்பதற்கு அசுத்தமாக இருக்கின்றது. ஆசிரியர் மாணவர்களை அழைத்துக்கொண்டு கடற்கரையைச் சுத்தம் செய்ய சென்றிருக்கிறார். மாணவர்கள் இருவராகச் சேர்ந்து கடற்கரையில் கிடக்கும் குப்பைகளைப் பொறுக்குகின்றனர். ஒரு மாணவன் மட்டும் தனியாகக் குப்பைகளைப் பொறுக்குகிறான். அப்போது குப்பைக்குப் பதிலாக அவன் நண்டை எடுக்கிறான். நண்டு அவன் கையைக் கடித்து விடுகின்றது. அவன், அம்மா! வலிக்கிறதே என்று அழுகிறான். அவன் கையில் இருந்து இரத்தம் வடிகின்றது. இதைப் பார்த்த மற்ற மாணவர்கள் அதிர்ச்சியுடன் நிற்கின்றனர். ஆசிரியர் உதவி செய்ய ஓடி வருகிறார். அவனின் கவனமற்ற செயலால் ஏற்பட்ட விளைவை எண்ணி வருந்தினான். நமது நாடு சுத்தமான நாடு. நமது நாட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வது நமது கடமையாகும்.

**<u>பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்</u>**

படத்தோடு தொடர்புடைய உரையாடலில் ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றம் செய்வர்.

**<u>படித்தல்</u>**

- எழுத்துகளைச் சரியாக அடையாளம் காண்பர்.
- சொற்களை / சொற்றொடர்களை / வாக்கியங்களை எழுத்துக்கூட்டிச் சரியான உச்சரிப்போடு வாய்விட்டுப் படிப்பர்.
- எளிய சொற்றொடர்களையும் வாக்கியங்களையும் படித்துத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.

**<u>எடுத்துக்காட்டு</u>** :-

**<u>சொல்வளப்பட்டியல்</u>**


**பாடம் 2**

1. எறும்பு
2. எண்பது
3. எட்டுக்கால்பூச்சி
4. எலும்பு
5. எழுபது

**<u>எழுதுதல்</u>**

**<u>கையெழுத்து</u>**

- எழுத்துகளையும் சொற்களையும் சொற்றொடர்களையும் பார்த்துத் தெளிவாகவும் வடிவம் சிதையாமலும் எழுதுவர்.
- **<u>எடுத்துக்காட்டு</u>** :-



**<u>சொல்வதெழுதுதல் பட்டியல் – தவணை 1</u>**

படித்த சொற்களையும் தொடர்களையும் பிழையின்றி எழுத்துக்கூட்டி எழுதுவர்.

**எடுத்துக்காட்டு** :-

| வாரம் 2 |
|---|
| 1. உண்டியல் |
| 2. உலகம் |
| 3. உடற்பயிற்சி |
| 4. உயரமான கட்டடம் |
| 5. உறவினர்கள் வந்தார்கள் |


**<u>எழுதுதல்</u>**


கொடுக்கப்பட்டுள்ள சொல்வளப்பட்டியல் (2A / 2B ) - அவற்றிலிருந்து


- படத்துடன் சொல்லை இணைத்தல்
- படத்தின் பெயரை எழுதுதல்
- கோடிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை நிரப்புதல்
- சரியான சொல்லை வட்டமிடுதல்
- சொல்லேணி அமைத்தல்
- கொடுக்கப்படும் ஓர் எழுத்தினைக்கொண்டு சொல் உருவாக்குதல்
- கொடுக்கப்படும் பல எழுத்துகளைக் கொண்டு சொல் உருவாக்குதல்
- சொற்றொடர்களை இணைத்தல்
- மாறிக்கிடக்கும் எழுத்துகளைக்கொண்டு சரியான சொல் அமைத்தல்
- சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து வாக்கியத்தை நிறைவு செய்தல்.
- படத்தின் துணைக்கொண்டு கோடிட்ட இடத்தில் சரியான சொல்லை எழுதுதல்
- கொடுக்கப்பட்டுள்ள சிறு பத்திகளில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளித்தல்
- படத்தைக்கொண்டு சிறு சிறு வாக்கியங்களாகக் கட்டுரை எழுதுதல்
- கொடுக்கப்பட்ட உதவிச்சொற்களைக்கொண்டு முன்னுணர்வுக் கருத்தறிதல் செய்தல்.


**சில எடுத்துக்காட்டு :-**

படங்களின் பெயர்களை எழுது.

1. 

2. 

3. 

4. 

5. 

**சொல் உருவாக்கு;**

1. ________________ 6. ________________

2. ________________ 7. ________________

3. ________________ 8. ________________

4. ________________ 9. ________________


5. ________________ 10. ________________

**முன்னுணர்வுக் கருத்தறிதல்**

கிஷாந்த் தன் தோழன் முபாரக்குடன் காற்பந்து விளையாடினான். முபாரக் காற்பந்தை

Q1 <u>**மெதுவாக**</u> உதைத்தான். பந்து வலைக்குள் நுழையவில்லை. அடுத்து கிஷாந்த் பந்தை

உதைத்தான். பந்து வலைக்குள் Q2 <u>**புகுந்தது**</u>. அவன் Q3 <u>**சத்தமாக**</u> கத்தினான்.




<u>**முன்னுணர்வுக் கருத்தறிதல் உத்தி முறை**</u>

மாணவர்கள் **மெதுவாக** என்ற பதிலைத் தேர்வு செய்வதற்கு உறுதுணையாக அமைவது **நுழையவில்லை** என்ற சொல். இச்சொல்லைக்கொண்டு மாணவர்கள் நெருக்கமான இரண்டு பதில்களில் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும்.

**நெருக்கமான பதில்கள் :** வேகமாக, மெதுவாக

**கருத்தறிதல்**

அம்மாவும் ராதாவும் கடைக்குச் சென்றார்கள். அங்கே ஒரு செருப்புக் கடை இருந்தது. செருப்பு அழகாக இருந்தது.

ராதா அதை அணிந்து பார்த்தாள். அம்மா வாங்கித் தந்தார். அவள் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள்.



**சரியாகப் பதில் எழுதவும்**

1. ராதா **எங்கே** சென்றாள்?

ராதா________________________________________________


________________________________________________சென்றாள் .

2. ராதா **என்ன** கடை பார்த்தாள்?

________________________________________________________________

_______________________________________________________________.

மாணவர்கள் கருத்தறிதலில் கேள்விகளைப் புரிந்துகொண்டு பதிலளிக்க இந்த வடிவ உத்திமுறை தொடக்கநிலை இரண்டில் கற்பிக்கப்படுகின்றது.



- எங்கே (ஓர் இடத்தின் பெயர்)


உங்கள் பள்ளி **எங்கே** உள்ளது?



- என்ன

  - நடந்த செயல், ஒருவர் செய்த செயல்
  - அறிந்துகொண்ட செய்தி


ராமு **என்ன** செய்தான்? (செயல்)
அது **என்ன** புத்தகம்? (பொருள்)



- எப்படி (ஒரு பொருளையோ செயலையோ வர்ணிப்பது )
ராதா **எப்படி** ஆடினாள்?



- எப்போது (நிகழ்ந்த காலம், இடம்)
ராமு **எப்பொழுது** எழுந்தான்?



- யார் (ஒருவரின் பெயரை எழுதவேண்டும்(

உன் நண்பன் **யார்**?



- எது (அஃறிணையையும் பொருள்களையும் குறிப்பது).

இதில் **எது** சிங்கம்? (அஃறிணை)

இதில் **எது** உன் பேனா? (பொருள்)

**மாதிரி கட்டுரை**

1. ஒரு நாள் அம்மா **பூங்காவுக்கு** அழைத்துச் சென்றார்
2. செடியில் பூக்கள் **அழகாக** இருந்தன.
3. பாரதி பூக்களைப் **பறித்தாள்.**
4. அம்மா அவளைக் **கண்டித்தார்.**
5. அதன்பின் பாரதி பூக்களைப் பறிப்பதை **நிறுத்தினாள்**.

**<u>மதிப்பீடு திட்டம்</u>**

- முறைசாரா மதிப்பீடு

**<u>முறைசாரா மதிப்பீட்டின் உத்திமுறைகள்</u>**

- கேள்வி கேட்டல்
- கருத்துத்தெரிவிப்பு
- சுய மதிப்பீடு / சக மாணவர் மதிப்பீடு / ஆசிரியர் மதிப்பீடு / பெற்றோர் மதிப்பீடு
- செயல்திறன் மதிப்பீடு
- செயல்திறன் கோப்பு

**மதிப்பீடு - ஓர் எடுத்துக்காட்டு ;-**

**<u>சுய மதிப்பீடு படிவம் –</u>** <u>Self Check</u>

பெயர்: ____________________ தேதி: ____________________

வகுப்பு: ____________________

**என் படைப்பின்போது நான்...**

| | நன்று | முயற்சி தேவை |
|---|---|---|
| புட்குறியீடு | | |
| தன்னம்பிக்கையுடன் பேசினேன். | | |
| உரக்கமாகவும் தெளிவாகவும் பேசினேன். | | |
| முழுமையான வாக்கியங்களைப் பயன்படுத்தினேன். | | |
| ஒவ்வொரு கதாபாத்திரத்தைப் பற்றியும் பேசினேன். | | |

## மாணவர்களிடத்தில் எதிர்பார்ப்புகள்

- **சொல்வதெழுதுதல்**
  சொல்வதெழுதுதல் பட்டியல் (தவணை 1 முதல் 4 வரை) கொடுக்கப்படும் சொற்களையும் தொடர்களையும் பிழையின்றி எழுத்துக்கூட்டி எழுதவேண்டும்.

- **வாசிப்பு**

  சொல்வளப்பட்டியல் (தவணை 1 முதல் 4 வரை) கொடுக்கப்படும் சொற்களையும் தொடர்களையும் பிழையின்றி எழுத்துக்கூட்டி வாசிக்கவேண்டும்.

- **மொழிப்பயிற்சி**
  வீட்டுப்பாடம் – மாணவர் கையேட்டிலும் பயிற்சித்தாளிலும் ஒப்படைக்கும் நாள் குறிக்கப்படும்.
- கொடுக்கப்படும் பயிற்சிகளைப் பிழையின்றிச் செய்யவேண்டும்.
- வீட்டுப்பாடத்தைச் சரியான நேரத்தில் முடிப்பது அவசியம்.
- பாடத்திருப்பம் - மாணவரைச் சோதிக்கும் வண்ணம் பயிற்சித்தாள்கள் கொடுக்கப்படும்.

## கற்றல் வளங்கள்

- **கல்வியில் பெற்றோர் பங்கு**
  http://parents-in-education.moe.gov.sg/
  கல்வியமைச்சின் இணையத்தளமான இந்தத் தளத்தில் பெற்றோர் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவுவதற்குப் பயன்படும் தகவல்களும் வளங்களும் உள்ளன.

- **தமிழ்மொழிக் கற்றல் வளர்ச்சிக் குழு**
  http://tamil.org.sg/
  பள்ளிக்கு அப்பாலும் பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்பதற்காகச் சமூக அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை இந்தத் தளத்தில் காணலாம்.

- **தமிழ் வாசிப்புக் குழு**
  http://www.nlb.gov.sg/golibrary/
  மாணவர்கள் பரந்துபட்ட அறிவைப் பெற வேண்டும் என்பதற்காக நூலகம் எண்ணிலடங்கா புத்தகங்களை இரவல் பெறவும் தரவிறக்கம் செய்து படிக்கவும் இந்தத் தளத்தை உருவாக்கியுள்ளது. நாங்கள் இந்தத் தளத்தைப் பயன்படுத்தி பயன்பெற ஊக்குவிக்கிறோம்.

- **மாணவர் கற்றல் தளம்**

  https://vle.learning.moe.edu.sg/login

- **மாணவர் முரசு புதிர்**
  https://www.tamilmurasu.com.sg/

***முற்றும்***